**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044320

1. District மாவட்டம்: நாமக்கல் | PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு நாமக்கல் | Year ஆண்டு: 2022 | FIR No. மு.த.அ. எண்: 3/AC/2022 | Date நாள்: 15.10.2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Act 1988 as amended in | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: 2018. | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல்: 14.10.2022 | Date to நாள் வரை: 14.10.2022
   Time Period : நேர அளவு
   Time from நேரம் முதல்: 17.30 மணி முதல் | Time to நேரம் வரை: 22.30 மணி வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 15.10.2022 | Time நேரம்: காலை 07.00 மணிக்கு

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 15.10.2022 Volume-IV | Time நேரம்: காலை 07.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: திடீர் தணிக்கையின் போது கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 3 கி.மீ தென் கிழக்கு.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address முகவரி: கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை (க ம ப) மற்றும் உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை நாமக்கல் உட்கோட்டம் அலுவலகங்கள், நாமக்கல்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: திரு.மு.இராமச்சந்திரன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: திரு.முருகேசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 1979
   (d) Nationality : நாட்டினம்: இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில்: காவல் துணை கண்காணிப்பாளர்
   (g) Address முகவரி: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   -NO DELAY.

• GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form.91 dated: 15/10/2022-ன் மூலம் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ம. இராமச்சந்திரன் Rank கா.து.க. to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

15/10/22.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15/10/2022 at 08.15 Hrs

Name: பெயர் ம. இராமச்சந்திரன்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்
உள்-த.க. பிரிவு, நாமக்கல்.

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2022, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,**

**எதிரிகளின் பட்டியல்:**

1) திரு.M.சந்திரசேகரன் (வயது-56), த/பெ.மாரியப்பன், கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கோட்டப்பொறியாளர் அலுவலகம், நாமக்கல்.

2) திரு.K.மாணிக்கம் (வயது-55), த.பெ.கிருஷ்ணன், உதவி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாமக்கல் உட்கோட்டம், உதவி கோட்டப்பொறியாளர் அலுவலகம், நாமக்கல்.

3) திருமதி.சுமதி (வயது-42), க/பெ.சரவணன், கண்காணிப்பாளர், உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத்துறை நாமக்கல் உட்கோட்டம், நாமக்கல்.

4) திரு.P.ரமேஷ் (வயது-45), த/பெ.பரமசிவம், அலுவலக உதவியாளர், கோட்டப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை, நாமக்கல்.

5) திரு.D.ரமேஷ் (வயது-53), த/பெ.தெய்வராஜ், ஓட்டுநர், உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை, நாமக்கல்.

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2022, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-12 இன் விபரம்:-**

---

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 14.10.2022-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 17.45 மணி முதல் இரவு 20.30 மணி வரை கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாமக்கல் அலுவலகத்திலும், 14.10.2022-ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 21.00 மணி முதல் 22.30 மணி வரை உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாமக்கல் நெடுஞ்சாலை உட்கோட்டம் அலுவலகத்திலும் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கைகளில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 15.10.2022-ஆம் தேதி சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2022, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் டவுன் மோகனூர் ரோட்டில் அடுத்தடுத்து ஒட்டினார்போல் அமைந்துள்ள நாமக்கல் மாவட்ட நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாமக்கல் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாமக்கல் உட்கோட்டம் ஆகிய அலுவலகங்களில் கோட்டப்பொறியாளர் அவர்களும், உதவிக் கோட்டப் பொறியாளர் அவர்களும் மற்றும் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நெடுஞ்சாலைத்துறை பணிகளை டெண்டர் எடுத்து வேலை செய்து வரும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களுக்கு கீழ் பணிபுரியும் உதவி பொறியாளர்கள், உதவி கோட்ட பொறியாளர்கள் ஆகியோர்களிடமிருந்து தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தீபாவளி இனாம் என்ற பெயரில் மாமூலாக அலுவலகத்தின் உள்ளேயும், வெளியேயும் வைத்து 14.10.2022-ஆம் தேதி கையூட்டாக பணம் பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த இரகசிய தகவலின் அடிப்படையில் காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அரசு சாட்சிகள் 1) திரு.வி.சேகர், த/பெ.விஜயன்,

முதுநிலை வருவாய் ஆய்வாளர், ஆய்வுக்குழு ஆய்வாளர் நிலை-1, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் மற்றும் 2) திரு.பு.கண்ணன், த/பெ.புள்ளாகவுண்டர், பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, மரூவூர்பட்டி, நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவினருடன் நாமக்கல் To மோகனூர் செல்லும் சாலையில் கிழக்குப்புறம் அமைந்துள்ள நாமக்கல் மாவட்ட நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 17.30 மணிக்கு வரப்பட்டது. அதே சமயத்தில் கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்கு ஒட்டினார்போல் தென்புறம் உள்ள உதவி கோட்ட பொறியாளர் அலுவலகத்தின் முன்பு நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி மற்றும் காவலர்களை கொண்டு அலுவலகத்தினுள் உள்ளே இருந்த அலுவலர்கள் மற்றும் தனியர்கள் யாரும் வெளியே செல்லா வண்ணமும் மற்றும் எந்த வித ஆவணங்களையும் மற்றும் பொருட்களையும் வெளியே மற்றும் உள்ளே எடுத்துச் செல்லா வண்ணம் காவலர்களை கொண்டு காப்பு பணி நியமிக்கப்பட்டது. பின்னர் நான் முதல் கட்டமாக கோட்டப் பொறியாளர் அலுவலகத்தின் உள்ளே கிழக்குப் பக்கம் தனி அறையில் அமர்ந்திருந்த கோட்டப் பொறியாளர் அவர்களிடம் சென்று அடையாள அட்டையை காண்பித்து என்னையும், என்னுடன் வந்த இரண்டு அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டு, அவ்வலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரம் பற்றி அவரிடம் தெரிவித்து விசாரிக்க, அவர் தனது பெயர் பொறியாளர் M.சந்திரசேகரன், (வயது-56), த/பெ.மாரியப்பன் என்றும், தான் நாமக்கல் மாவட்ட நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளராக கடந்த 20.11.2020-ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அலுவலகத்தில் பணியில் உள்ள அலுவலர்களை பற்றி நான் அவரிடம் விசாரிக்க, அலுவலகத்தில் அவருடன் சேர்த்து மொத்தம் 14 அலுவலர்கள் பணிபுரிந்து வருவதாகவும், அதில் நிர்வாகப் பிரிவில் உதவியாளர் திரு.மகேஷ்குமார், திருமதி.சித்ரா, திருமதி.பானுபிரியா, திருமதி.தங்கமணி, இளநிலை உதவியாளர்கள் திரு.சரவணன், திருமதி.விசாலாட்சி, தட்டச்சர் திரு.கிருஷ்ணவேணி, திருமதி.நிவேதா, பதிவுரு எழுத்தர் திரு.சுகந்தி, ஜீப் ஓட்டுநர் திரு.பாலுசாமி, அலுவலக உதவியாளர் திரு.ரமேஷ், திரு.ஹரிஹரன்,

கண்காணிப்பாளர் கோபாலகிருஷ்ணன், கோட்ட கணக்கர் திரு.சதீஷ் ஆகியோர் பணிபுரிந்து வருவதாகவும், அதில் திரு.சதீஷ் அவர்கள் காலை உடல்நிலை சரியில்லாததால் அனுமதி விடுப்பில் வெளியில் சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் அலுவலகத்தின் மாடியில் இயங்கி வரும் தொழில்நுட்பப் பிரிவில் இளநிலை வரைவு அலுவலர் திரு.சரண்ராஜ் அவர்கள் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். இவ்வலுவலகத்தின் கிழக்குப் பக்கம் தனது கட்டுப்பாட்டில் உள்ள உதவிக் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாமக்கல் அலுவலகம் இயங்கிவருவதாகவும், திரு.மாணிக்கம் என்பவர் உதவிக் கோட்டப் பொறியாளராக பணிபுரிந்து வருவதாவும் தெரிவித்தார். மேலும் தற்போது சில தனிநபர்கள் அலுவலகத்திற்கு வந்துள்ளனர் என்றும் தெரிவித்தார். கோட்டப் பொறியாளர் அலுவலக அறைக்கு வெளிப்புறம் வந்து அலுவலர்கள் அனைவரையும் அவரவர் இருக்கையில் அமருமாறு நான் கேட்டுக் கொண்டேன். பின்னர் நான் கோட்டப் பொறியாளர் அறையில் வைத்து சந்தேகத்தின் பேரில் அரசு சாட்சிகள் உதவியுடன் மேற்படி கோட்ட பொறியாளர் திரு.M.சந்திரசேகரன் அவர்களை சோதனையிட்டதில், அவர் தனது பேண்டின் இடது பக்க பின்பாக்கெட்டில் மணிபர்சில் வைத்திருந்த பணத்தை மடிப்புகளுடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.7,000/- (Rs.2000 X 2, Rs.500 x 6) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி தொகை ரூ.7,000/-ஐ தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையின் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரை சோதனையிட அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.520/- எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.520/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கோட்டப் பொறியாளர் அவர்களின் அறைக்கு வெளியில் உள்ள நாற்காலியில் அமர்ந்திருந்த நபர்களை பற்றி விசாரிக்க அவர்களில் ஒருவர் தன் பெயர் G.செல்வகுமார் த/பெ.கோபாலன், க.எண்.7/11, மேட்டூர் மெயின்ரோடு, பொட்டனேரி அஞ்சல், மேட்டூர் என்றும்

மற்றொருவர் தான் P.காமராஜ் த/பெ.பழனிசாமி, க.எண்.1/1, வேடித்தெரு, செங்கானூர், பூமிநாய்க்கன்பட்டி அஞ்சல், சேலம் என்றும் தாங்கள் மாதா என்ஜினியரிங், பொட்டனேரி, மேட்டுர் என்ற முகவரியில் செயல்பட்டுவரும் நிறுவன உரிமையாளர் மற்றும் பணியாளர் என்றும் மின்சார வாரிய கான்ட்ராக்ட் எடுத்து பணி செய்து வருவதாகவும் தற்பொழுது நாமக்கல் to பரமத்தி செல்லும் சாலையில் உள்ள சாலை விரிவாக்க பணியின் போது மின்கம்பங்களை மாற்றி போடும் கான்ட்ராக்ட் ரூ.24 லட்சத்திற்கு எடுத்து உள்ளதாகவும், சில இடங்களில் drainage கட்டப்படாமல் உள்ளதால் அதனை கட்டுவது குறித்து DE அவர்களை சந்தித்து பேச வந்திருப்பதாகவும் தெரிவித்தனர். அவர்களை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்து விசாரிக்க அவர்களிடம் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ பொருளோ இல்லை. மேலும் அடுத்ததாக அமரவைக்கப்பட்டிருந்த நபரை விசாரிக்க அவர் தன் பெயர் A.சூர்யபிரகாஷ், த/பெ.ஆறுமுகம், க.எண்.123, மாரியம்மன் கோவில் எதிரில், அலமேடு, ஆலாம்பாளையம் அஞ்சல், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்றும் தான் கடந்த 2020-ஜனவரி முதல் திருச்செங்கோடு நெடுஞ்சாலை உட்கோட்டம் உதவிப் பொறியாளர் அலுவலகத்தில் டெக்னிக்கல் அசிஸ்டன்ட்-ஆக தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாகவும், தற்பொழுது அவர் பணிபுரியும் அலுவலகத்தில் உதவி பொறியாளர்-ஆக திரு.சையது ராசிம் என்பவரும், திருச்செங்கோடு உதவி கோட்ட பொறியாளராக திருமதி.தமிழரசி அவர்களும் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் இன்று நாமக்கல் கோட்ட பொறியாளர் திரு.சந்திரசேகர் அவர்களும், நாமக்கல் உதவி கோட்ட பொறியாளர் திரு.மாணிக்கம் அவர்களும் திருச்செங்கோடு பகுதிக்கு சைட் இன்ஸ்பெக்சன் பார்க்க வந்திருந்ததாகவும், பின்னர் அவர்கள் திருச்செங்கோடு உதவி கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்கும் வந்து சென்றதாகவும், இன்று மாலை சுமார் 3.30 மணிக்கு உதவி பொறியாளர் சையதுரசிம் என்பவர் தன்னை அழைத்து ஒரு கவரை கொடுத்து அதில் பணம் உள்ளதாகவும், நாமக்கல் சென்று நாமக்கல் நெடுஞ்சாலை துறை உதவி கோட்டப் பொறியாளர் AD திரு.மாணிக்கம் அவர்களிடம் கொடுக்கும்படி அனுப்பியதாகவும், இன்று மாலை 4.45 மணி சுமாருக்கு நாமக்கல் வந்து சேர்ந்ததாகவும் அப்போது திருச்செங்கோடு உதவி

கோட்ட பொறியாளர் திருமதி.தமிழரசி அவர்கள் தனக்கு போன் செய்து எங்கிருக்கிறீர்கள் என்று கேட்க, தான் நாமக்கல் வந்துவிட்டதாக தெரிவித்ததாகவும், பின்னர் தான் நாமக்கல் உதவி கோட்ட பொறியாளர் திரு.மாணிக்கம் அவர்களுக்கு அவருடைய செல்போன் எண் 9442251792-க்கு போன் செய்து பேசி திருச்செங்கொடு உதவி பொறியாளர் தன்னிடம் பணம் கொடுத்து அனுப்பியுள்ளதை கூறி எங்கு வரவேண்டும் என்று கேட்டதாகவும், அவர் அவரது அலுவலகத்திற்கு வரச்சொன்னதாகவும், அதன்படி தான் நாமக்கல் உதவி கோட்ட பொறியாளர் அலுவலகம் வந்து அங்கிருந்த உதவி கோட்ட பொறியாளர் திரு.மாணிக்கம் அவர்களிடம் மேற்படி பணத்துடன் இருந்த கவரை கொடுத்ததாகவும், அவர் தான் கொடுத்த பணத்துடன் இருந்த கவரை பெற்றுக்கொண்டதாகவும் பின்னர் தான் கோட்ட பொறியாளர் அவர்களின் அலுவலகத்திற்கு வந்து ஒரு கோப்பு விசயமாக அங்குள்ள அலுவலரை சந்திக்க வந்ததாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் அவரை சோதனையிட, அவர் தனது சட்டையின் இடது பக்க மேல்வெளிப்பாக்கெட்டில் இருந்து ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.500/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கோட்டப்பொறியாளர் அவர்களை உடன் அழைத்துக் கொண்டு, அலுவலர்கள் அமர்ந்து பணிபுரியும் அலுவலர் அறைக்கு செல்லப்பட்டது. அங்கு அ1 இருக்கை உதவியாளர் திரு.சு.மகேஷ்குமார், த/பெ.சுந்தரம், அ2 இருக்கை உதவியாளர் திருமதி.ஜெ.சித்ரா, த/பெ.ஜெயபால், அ3 இருக்கை உதவியாளர் திருமதி.செ.தங்கமணி, த/பெ.செங்கோட்டுவேலு, அ4 இருக்கை உதவியாளர் திருமதி.க.பானுபிரியா, த/பெ.கன்னிகான், அ5 இருக்கை இளநிலை உதவியாளர் திரு.ரா.சரவணன், த/பெ.ராமசாமி, அ6 இருக்கை இளநிலை உதவியாளர் திருமதி.ரா.விசாலாட்சி, த/பெ.ராமசாமி, பதிவுரு எழுத்தர் திருமதி.வை.சுகந்தி, த/பெ.வையாபுரி, டைப்பிஸ்ட்கள் திருமதி.சி.கிருஷ்ணவேணி, த/பெ.சின்னுசாமி மற்றும் திருமதி.சு.நிவேதா, த/பெ.சுப்பிரமணியன் ஆகியோர்களை சோதனையிடப்பட்டு, அவர்கள் வைத்திருந்த பணம் குறித்து விளக்கம் கேட்கப்பட்டது. அவர்கள் உரிய பதில் கூறியதால் அத்தொகைகள் அவர்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. அவர்களது அலுவலக இருக்கைகள் முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான

வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் அலுவலக உதவியாளர் இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.ப.ரமேஷ், த/பெ.பரமசிவம் என்றும், தான் அலுவலக உதவியாளராக 2018-ஆம் வருடம் முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் வைத்திருந்த மணிபர்சில் இருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் ரூ.11,220/-(Rs.500 x 22, 100 x 2, 20 x 1) இருந்தது. அதுகுறித்து அவரிடம் விசாரித்தபோது, அதில் ரூ.220/- அவரது சொந்த பணம் என்றும் மீதி பணம் ரூ.11,000/- குறித்து அவர் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தார். அவரது சொந்த பணம் ரூ.220/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி ரூ.11,000/- குறித்து அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் அந்த பணம் ரூ.11,000/- தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் கோட்டப்பொறியாளர் அலுவலக ஜீப் ஓட்டுநர் திரு.வெ.பாலுசாமி, த/பெ.வெங்கட்ராமன் என்பவரை விசாரித்து சோதனையிடப்பட்டு, அவர் வைத்திருந்த பணம் குறித்து விளக்கம் கேட்கப்பட்டது. அவர் உரிய விளக்கம் கூறியதால் அவரிடம் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் மற்றொரு அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.தெ.ரமேஷ், த/பெ.தெய்வராஜ் என்றும், தான் உதவிக் கோட்டப்பொறியாளர் அலுவலக ஜீப் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் மணிபர்சில் இருந்து பணம் இரண்டு மடிப்புகளாக எடுத்து ஆஜர் செய்தார் அதில் ஒன்றில் ரூ.6,000/-மும் மற்றொரு மடிப்பில் ரூ.160/-ம் இருந்தது. அப்பணத்தில் ரூ.160/- அவரது சொந்த பணம் என்றும் மீதி பணம் ரூ.6,000/- குறித்து அவர் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தார். அவரது சொந்த பணம் ரூ.160/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. ரூ.6,000/- குறித்து அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் அந்த பணம் ரூ.6,000/- (Rs.500 x 12) தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் அலுவலக உதவியாளர் திரு.ரா.ஹரிஹரன், த/பெ.ராஜு,

தற்காலிக கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் திரு.பா.மோகன்ராஜ், த/பெ.பாலு, கண்காணிப்பாளர் திரு.ரா.கோபாலகிருஷ்ணன், த/பெ.ராமன் ஆகியோர்களை விசாரித்து சோதனையிடப்பட்டு, அவர்கள் வைத்திருந்த பணம் குறித்து விளக்கம் கேட்கப்பட்டது. அவர்கள் வைத்திருந்த பணம் குறித்து உரிய விளக்கம் கூறியதால் அவர்களிடம் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் கோட்டப் பொறியாளர் அவர்களுடன் அலுவலக மாடியில் உள்ள தொழில்நுட்ப அறைக்கு சென்றேன். அங்கு பணியில் இருந்த இளநிலை வரைவு அலுவலர் திரு.ம.சரண்ராஜ், த/பெ.மாணிக்கம், தற்காலிக டைப்பிஸ்ட் திருமதி.ரா.ஜெகதீஸ்வரி, த/பெ.ராமசாமி, தற்காலிக கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் திருமதி.அ.மேகலா, த/பெ.அழகேசன், முதுநிலை வரை தொழில் நுட்ப அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற தனியர் திரு.A.அசோகன், த/பெ.ஆர்.அப்புசாமி, க.எண்.20/11, பிள்ளையார் நகர், கோர்ட் ரோடு, சேலம் ஆகியோர்களை விசாரித்து சோதனையிடப்பட்டு, அவர்கள் வைத்திருந்த பணம் குறித்து விளக்கம் கேட்கப்பட்டது. அவர்கள் வைத்திருந்த பணம் குறித்து உரிய விளக்கம் கூறியதால் அவர்களிடம் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தின் பின்புறம் அமைந்துள்ள கோட்டப் பொறியாளர் குடியிருப்பு குறித்து விசாரித்ததில், அதில் தான் குடியிருக்கவில்லை என்றும், அதிலுள்ள முன் அறையை அலுவலக கோப்புகளை பார்வையிடுவதற்காக அலுவலக அறையாக பயன்படுத்தி வருகிறேன் என்றும், மேலும் தனது வீடு நாமக்கல் டவுன் கணேசபுரத்தில் அமைந்துள்ளது என்றும் கூறினார். அதனால் நான் கோட்டப்பொறியாளர் மற்றும் குழுவினருடன் அங்கு சென்றேன். கோட்டப் பொறியாளர் அவர்கள் தன்வசம் இருந்த சாவி கொண்டு அந்த அறையை திறந்தார். பின்னர் அந்த அறையின் மேசையை சோதனையிட்டதில், அந்த மேசை மீது அவரது அலுவலகம் தொடர்பான கோப்புகள் இருந்தன. அந்த மேசை டிராயரை சோதனையிட்டதில், அதில் பணம் கத்தையாக ரூ.76,000/- (Rs.2000 x 21, Rs.500 x 68) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க, அவர் தனது மகளின் லேப்டாப் கம்ப்யூட்டரை சரி செய்ய வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இல்லாததாலும், பணம் வைத்திருந்த விதம் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும்

மேற்படி தொகை ரூ.76,000/- தொடர் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அந்த மேசையின் மீதிருந்த அலுவலக கோப்புகள் மற்றும் மற்ற ஆவணங்களை பார்வையிட்டதில், அதில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் கோட்டப்பொறியாளர் திரு.சந்திரசேகரன் அவர்களின் மகன் மகிபிரனேஷ் என்பவரின் பெயரில் ரூ.4,51,000/- மதிப்புள்ள வேலகவுண்டம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.2024/2022 நாள்:10.06.2022, மேலும் திரு.சந்திரசேகரன் மகன் மகிபிரனேஷ் என்பவரின் பெயரில் ரூ.17,80,000/- மதிப்புள்ள 2-எண் இணை சார்பதிவாளர் நாமக்கல் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.3082/2020 நாள்: 16.09.2020 மற்றும் திரு.சந்திரசேகரன் அவர்களின் மனைவி ஜெயந்தி என்பவரின் பெயரில் ரூ.28,00,000/- மதிப்புள்ள 2-எண் இணை சார்பதிவாளர் நாமக்கல் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.3219/2016 நாள்: 15.09.2016 ஆகிய ஆவணங்களும் இருந்தன. அந்த ஆவணங்களை நானும், அரசு சாட்சிகளும் பார்வையிட்டு கோட்டப் பொறியாளர் அவர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் கொடிநாள் வசூல் இலக்கு சம்மந்தமான இலக்கு பற்றி கேட்டபோது, அவர் மொத்த தொகை ரூ.1,00,000/-க்கு வசூல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், அதை தான் நான்கு உட்கோட்டங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டு, மொத்தம் ரூ.67,000/- வசூல் செய்யப்பட்டு 23.06.2022-ஆம் தேதி அதற்கான வரைவோலை தொகை உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நலன், நாமக்கல் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்கான ந.க.எண்.2553/2022/அ-6, நாள்: 23.06.2022 என்ற அலுவலக கோப்பினை ஆஜர் செய்து, கோட்டப் பொறியாளருக்கு என்று தனியாக வசூல் இலக்கு இல்லை என்றும் தெரிவித்தார். அக்கோப்பு பார்வையிடப்பட்டு அதன் நகல் அவரிடம் சான்றொப்பம் பெறப்பட்டு செயல்முறை ஆணை மூலம் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. பின்னர் நான் கோட்டப்பொறியாளர் மற்றும் குழுவினரை அழைத்துக் கொண்டு அலுவலகத்தின் வெளியே சென்று, கோட்டப்பொறியாளர் மற்றும் உதவி கோட்டப் பொறியாளர் ஆகியோரின் அரசு வாகனம் மற்றும் இங்குள்ள அலுவலர்களுக்கு சொந்தமான அனைத்து வாகனங்களையும் சோதனையிட்டேன். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அலுவலக உதவியாளர் திரு.ப.ரமேஷ், த/பெ.பரமசிவம் அவர்களுக்கு

சொந்தமான TN 28 BC 9020 ஹோண்டா டியோ ஸ்கூட்டர் வாகனத்தையும் சோதனை செய்தேன். அந்த வாகனத்தின் பெட்டியில் இருந்த மஞ்சள் அட்டையுடன் உள்ள சிறிய நோட்டு புத்தகத்தை எடுத்து திரு.ப.ரமேஷ் ஆஜர் செய்தார். அந்த நோட்டு புத்தகத்தில் அலுவலக உதவியாளர்களான ரமேஷ் மற்றும் ஹரிஹரன் பெயர் எழுதப்பட்டிருந்தது. அதன் விபரம் கேட்க, தீபாவளி அன்பளிப்பாக மற்ற அதிகாரிகள் மற்றும் கான்ட்ராக்டர்களிடம் பெற்ற தொகையை எழுதி வைத்துள்ளோம் என்று கூறினார். அந்த நோட்டுபுத்தகத்தில் விபரங்கள் எழுதப்பட்ட பக்கங்களில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து அந்த நோட்டுபுத்தகத்தை நான் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மற்ற வாகனங்களில் கைப்பற்றக் கூடிய பொருட்களோ, ஆவணங்களோ ஏதும் இல்லை. பின்னர் மேற்படி தனியர்கள் /தற்காலிக பணியாளர்கள் திரு.சூர்யபிரகாஷ், திருமதி.மேகலா, திருமதி.ஜெகதீஸ்வரி, திரு.மோகன்ராஜ், திரு.அசோகன் மற்றும் அலுவலர்கள் திரு.D.ரமேஷ், ஓட்டுநர் மற்றும் திரு.P.ரமேஷ், அலுவலக உதவியாளர் ஆகியோரை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் நான் நாமக்கல் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் அலுவலகத்தில் முதலில் தொடங்கிய திடீர் சோதனையை முடித்து அதன் தொடர்ச்சியாக இரவு சுமார் 20.45 மணிக்கு நெடுஞ்சாலைத்துறை நாமக்கல் உபகோட்டம், உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு அரசு சாட்சிகளுடன் வந்து அவ்வலுவலகத்திற்குள் தென்மேற்கு பக்கம் வடக்கு பார்த்த தனி அறையில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த உதவி கோட்டப் பொறியாளர் அவர்களிடம் சென்று அடையாள அட்டையை காண்பித்து என்னையும், என்னுடன் வந்த இரண்டு அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டு, அவ்வலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரம் பற்றி அவரிடம் தெரிவித்து திடீர் தணிக்கை மேற்கொண்டேன். நான், உதவி கோட்டப் பொறியாளர் அவர்களிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் K.மாணிக்கம், (வயது-56), த/பெ.கிருஷ்ணன் என்றும் தான் நாமக்கல் உட்கோட்ட நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளராக கடந்த 23.07.2021-ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அலுவலகத்தில் பணியில் உள்ள அலுவலர்களை பற்றி அவரிடம் விசாரிக்க, அலுவலகத்தில் தன்னுடன் சேர்த்து மொத்தம் 8 அலுவலர்கள் பணிபுரிந்து

வருவதாகவும், அதில் கண்காணிப்பாளராக திருமதி.சுமதி என்பவரும், இளநிலை வரைதொழில் அலுவலராக திரு.மு.பிரதீப் என்பவரும், அ-1 உதவியாளராக திரு.ரா.கார்த்திக் என்பவரும், அ-2 இளநிலை உதவியாளராக திரு.ம.மோகன்ராஜ் என்பவரும், அலுவலக உதவியாளராக திருமதி.ச.சாந்தி என்பவரும், சாலை பணியாளராக திரு.வெ.குணசேகரன் என்பவரும், தற்காலிக கணிணி இயக்குநராக திரு.செ.தமிழ்செல்வி ஜீப் ஓட்டுநர் திரு.ரமேஷ் ஆகியோர் பணிபுரிந்து வருவதாகவும், அதில் ஜீப் ஓட்டுநர் திரு.ரமேஷ் அருகிலுள்ள நெடுஞ்சாலைத்துறை ஆய்வு மாளிகையில் வெளியில் ஜீப்பை நிறுத்த சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். உதவி கோட்டப் பொறியாளர் அலுவலக அறைக்கு வெளிப்புறம் வந்து அந்த அறையின் வடகிழக்கு பகுதியில் உள்ள அலுவலகத்தில் நுழைந்து அங்கிருந்த அலுவலர்கள் அனைவரையும் அவரவர் இருக்கையில் அமருமாறு நான் கேட்டுக் கொண்டேன். பின்னர் நான், முதலாவதாக உதவி கோட்டப் பொறியாளர் அறையில் வைத்து சந்தேகத்தின் பேரில் அரசு சாட்சிகள் உதவியுடன் மேற்படி உதவி கோட்டப் பொறியாளர் திரு.K.மாணிக்கம் அவர்களை சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டிலிருந்து ரூ.4,000/- (Rs.500x7, 200x2, 50x2) எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து கேட்டபோது முன்னுக்குபின் முரணாக பதில் அளித்ததால் அப்பணத்தை விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையின் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரது பேண்ட் பாக்கட்டில் இருந்து மொத்தம் ரூ.525/- எடுத்து ஆஜர் செய்து அது தனது செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததால் அப்பணம் ரூ.525/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். மேலும் அவரது டேபிளை சோதனை செய்ததில், அவரது டேபிள் மீது நீலம் மற்றும் வெள்ளை நிறம் கலந்த பிளாஸ்டிக் கவரில் உள்ளே பெரிய பிரவுன் கலர் அலுவலக கவரில் ரூ.6,50,000/- (Rs.500 X 1300) இருந்தது. சிறிய பிரவுன் கலர் கவரில் ரூ.60,000/- (Rs.500 X 120) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் நெடுஞ்சாலைத்துறை திருச்செங்கோடு உதவி பொறியாளர் அவர்களிடம் தற்காலிகமாக பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர் திரு.சூர்யா என்பவர் இன்று மாலை 05.00 மணியளவில் தன்னை வந்து சந்தித்து தன்னிடம் இரண்டு

கவர்களை கொடுத்து திருச்செங்கோடு உதவி கோட்டப் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர்கள் அவரிடம் கொடுக்க சொன்னதாக தெரிவித்து தன்னிடம் கொடுத்து சென்றதாக தெரிவித்தார். மேலும் மேற்படி அவர் கொடுத்தச் சென்ற கவர்களில் ஒரு கவரில் ரூ.2,00,000/-மும் மற்றொரு கவரில் ரூ.1,00,000/-மும் ஆக மொத்தம் ரூ.3,00,000/- இருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர் இன்று மதியம் தானும் கோட்ட பொறியாளர் திரு.சந்திரசேகரன் அவர்களும் சித்தாளந்தூர் to சோழசிராமணி வரை நடைபெற்று வரும் சாலை பணியை பார்வையிட சென்றிருந்த சமயத்தில் அங்கு வைத்து பரமத்தி நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் ரூ.3,50,000/-ஐ கோட்ட பொறியாளரிடம் கொடுத்தார் என்றும், மேற்படி தொகைகளை நாமக்கல் கோட்டப் பொறியாளர் திரு.சந்திரசேகரன் அவர்கள் தன்னை வாங்கி வைத்திருந்து கொடுக்க சொன்னதால் அவற்றை தான் ஒரு பெரிய பிரவுன் கலர் அலுவலக கவரில் வைத்திருந்தேன் என்றும் சொன்னார். மேலும் அதற்கு முன்னதாக இன்று காலை கோட்டப்பொறியாளர் திரு.சந்திரசேகரன் அவர்கள் ஒரு சிறிய பிரவுன் கலர் அலுவலக கவரில் ரூ.60,000/-ஐ தன்னிடம் வைத்திருக்கும்படி கொடுத்தார் என்றும் தெரிவித்தார். மேற்படி தொகைகள் எதற்காக கோட்டப்பொறியாளர் அவர்களால் தங்களிடம் கொடுக்கப்பட்டது என்றும், தங்களால் ஏன் அது பெற்று வைக்கப்பட்டது என்றும் கேட்டபோது, அதுகுறித்து உதவி கோட்டப்பொறியாளர் சரியான விளக்கம் கொடுக்கவில்லை. ஆதலால் அப்பணம் மொத்தம் ரூ.7,10,000/- விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் உதவி கோட்டப்பொறியாளர் இருக்கைக்கு இடதுபுறம் இருந்த ஒரு இரும்பு பிரோவை சோதனை செய்தபோது, அதில் ஒரு கருப்பு கலர் ரெக்சின் கைபையில் ரூ.74,000/- (Rs.2000x2, 500x122, 100x90) இருந்தது. அதே கைப்பையில் மற்றொரு அறையில் ரூ.2,000/- (Rs.500x1, 50x8, 20x45, 10x20) இருந்தது. பீரோவில் அதே அறையில் மேலும் தனியாக ரூ.10,000/- (Rs.500x3, 200x2, 100x81) மடிப்புடன் இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து உதவி கோட்ட பொறியாளர் அவர்களிடம் கேட்டபோது, சரியான விளக்கம் சொல்லாததால் அப்பணம் மொத்தம் ரூ.86,000/-ஐ விசாரணைக்காக நான் கைப்பற்றிக்

கொண்டேன். பின்னர் உதவி கோட்டப்பொறியாளர் அவர்களிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்து கேட்க, அவர் கண்காணிப்பாளர் திருமதி.ச.சுமதி க/பெ.சரவணன் என்பவர் மூலம் ஆஜர் செய்த பணப்புத்தக பதிவேடு, அலுவலக வருகை பதிவேடு, பகிர்மான பதிவேடு, தாமத வருகை பதிவேடு, அளவு புத்தக பதிவேடு, மாற்றுச்சாவி பதிவேடு, 2022-2023 ஆண்டுக்கான பலவகை சொத்து பதிவேடு ஆகியவற்றை பார்வையிட்டு, பார்வையிட்டதற்கு அடையாளமாக கண்காணிப்பாளர், உதவி கோட்டப் பொறியாளர், அரசு சாட்சிகள் ஆகியோரிடம் கையொப்பம் பெற்று, நானும் அதில் கையொப்பம் செய்தேன். அலுவலகத்திற்கு வரும் பணியாளர்கள் கொண்டு வரும் சொந்தப் பணம் பற்றி பதிவுகள் செய்யும் தனிநபர் ரொக்க கையிருப்பு பதிவேடு குறித்து கேட்டபோது, அவர் அத்தகைய பதிவேடு ஏதும் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். பின்னர் அவரிடம் படைவீரர் கொடிநாள் நிதி இரசீது புத்தகம் ஏதும் உள்ளதா என்று கேட்க, இந்த ஆண்டிற்கான படைவீரர் கொடிநாள் நிதி இரசீது புத்தகம் தங்கள் அலுவலகத்திற்கு வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். மேலும் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் உதவி கோட்ட பொறியாளரிடம் தங்கள் அலுவலகத்திற்கு கொடிநாள் இலக்கு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்று கேட்க, அவர் இந்த ஆண்டு இதுநாள் வரை கொடிநாள் ரசீதுகள் தங்கள் அலுவலகத்திற்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். பின்னர் உதவி கோட்டப்பொறியாளர் அவர்களை உடன் அழைத்துக் கொண்டு அலுவலர்கள் அறைக்கு செல்லப்பட்டது. அங்கு கண்காணிப்பாளர் அறையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.சுமதி க/பெ.சரவணன் என்றும், தான் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, தனது கைப்பையிலிருந்து ரூ.6,900/- எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து அவரிடம் கேட்டபோது முன்னுக்குபின் முரணாக பதில் அளித்ததால் அப்பணம் ரூ.6,900/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் இளநிலை வரைதொழில் அலுவலர் திரு.மு.பிரதீப் என்பவரை சோதனையிட்டபோது அவரிடம் எந்த பணமும் இல்லை. பின்னர் அ1 இருக்கை உதவியாளர் திரு.ரா.கார்த்திக், அ2 இருக்கை இளநிலை உதவியாளர் திரு.ம.மோகன்ராஜ், சாலை பணியாளர் திரு.வெ.குணசேகரன், அலுவலக

உதவியாளர் திருமதி.ச.சாந்தி, தற்காலிக கணிணி இயக்குநராக பணிபுரியும் திருமதி.செ.தமிழ்செல்வி ஆகியோரை சோதனையிட்டு விசாரித்த போது, அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு உரிய விளக்கம் கூறியதால் அத்தொகைகள் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலர்களின் இருக்கைகள் மற்றும் இரும்பு பீரோக்கள் மற்றும் கப்போர்டுகள் ஆகியவற்றை சோதனை செய்தபோது அவற்றில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் உதவி கோட்டப்பொறியாளர் மற்றும் குழுவினரை அழைத்துக் கொண்டு அலுவலகத்தின் வெளியே சென்று இங்குள்ள அலுவலர்களுக்கு சொந்தமான அனைத்து வாகனங்களையும் சோதனையிடப்பட்டது, அவற்றில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மேற்படி கண்காணிப்பாளர் திருமதி.ச.சுமதி, க/பெ.சரவணன் மற்றும் தனியர்/தற்காலிக பணியாளர் செல்வி.செ.தமிழ்செல்வி ஆகியோரை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அவர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதிபலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அலுவலர்கள் தனியர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக அவை முறையற்ற முறையில் அலுவலர்களால் அவர்களிடமிருந்து பிரதிபலனாக பெறப்பட்டிருக்கும் பணமாக இருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி ஒப்புதல் பெற்று, மேற்படி எதிரிகள் மீது இன்று 15.10.2022-ஆம் தேதி சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2022, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின்

அசல்கள், வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்பமை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

15/10/2

(மு. இராமச்சந்திரன்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.